Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.II, Tindivanam.

**CASE NO.CC.20/2011**

**Prosecution witness – PW – 9**

**DATE : 27.06.2024**

Name : திரு. சுந்தரமூர்த்தி Caste :

Father'SName : த/பெ. ராமன் Calling :

Village/city : பிரம்மதேசம் Age : 75

(எதிரிகள் 1, 8, 9, 12, 14,16 இறந்துவிட்டனர். எதிரிகள் 6, 11 ஆஜரில்லை. அவர்கள் தரப்பில் அவரது வழக்கறிஞர் குமுவிச.பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்து மனு அனுமதிக்கப்பட்டுள்ளது. மற்ற எதிரிகள் ஆஜர்.)

<u>முதல் விசாரணை.</u>

நான் தற்போது வீட்டில் தான் இருந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அவர்களை நான் பிரம்மதேசம் தொடக்கவேளாண்மை கூட்டுறவு சங்கத்தில் பார்த்திருக்கிறேன். கடந்த 4, 5 வருடங்களுக்கு முன்பாக என்னை கூட்டுறவு தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தில் இருந்து அழைத்து ரூ.15 ஆயிரம் மற்றும் ரூ.6 ஆயிரம் கடன் என் பெயரில் வாங்கியுள்ளதாக கூறினார்கள். நான் எனக்கு நிலம் எதுவும் பிரம்மதேசகத்தில் இல்லை என்றும் நான் கடன் எதுவும் வாங்கவில்லை என்று அவர்களிடம் கூறினேன். பிரம்மதேசம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் நான் உறுப்பினராக இல்லை. அவர்கள் விசாரித்த போது மேற்படி சங்கதியை கூறிவிட்டு கடன் வாங்கவில்லை என்று சொன்னவுடன் என்னை அனுப்பிவிட்டார்கள். எனக்கு கையொப்பம் எதுவும் போடத்தெரியாது. கூட்டுறவு சங்கத்தில் உள்ள சிறுசிறு வேலைகளை செய்துதருவேன். வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தனர்.

**<u>17 ஆம் எதிரி தரப்பு வழக்கறிஞரின் குறுக்கு விசாரணை.</u>**

நான் பிரம்மதேசத்தில் எத்தனை ஆண்டுகாலமாக இருந்தேன் என்றால் ஞாபகமில்லை. வன்னிப்பேர் கிராமம் தெரியுமா என்றால் தெரியும். வன்னிப்பேர்

கிராமத்தில் வசிப்பவர்கள் பிரம்மதேசம் கூட்டுறவு தொடக்கவேளாண்மை சங்கத்தில் தான் கடன் பெறுவர் என்றால் ஆமாம். நான் வன்னிப்பேர் கிராமத்தில் குத்தகைக்கு நான் பயிர் வைத்திருந்தேன் என்றால் இல்லை. அவ்வாறு குத்தகைக்கு பயிர் செய்தபோது தான் நான் கடன்வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் ஜாமின்தார்களை வைத்து கடன் வாங்கிவிட்டு அரசாங்கம் தள்ளுபடி செய்துவிடும் என்று கட்டாமல் இருந்துவிட்டு தற்போது தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் கடனுக்காக கையொப்பம் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியாக போடத்தெரியாது. நான் தனிப்பட்ட முறையில் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் ஆமாம்.

**மற்ற எதிரிகள் தரப்பு வழக்கறிஞரின் குறுக்கு விசாரணை**

சொசைட்டியில் என்னிடம் ஆவணங்களை காண்பித்து என்னுடைய கையொப்பம் உள்ளதா என்று சரிபார்த்தார்களா என்றால் இல்லை. எதிரிகளை எனக்கு நேரடியாக தெரியாது என்று சொன்னால் ஆமாம். வேறு யார் பேரிலும் கடன் வாங்க இயலாது என்றும் நான் தான் என்னுடைய ஆவணங்களை கொடுத்து கடன் பெற்றுள்ளேன் என்றும் தற்போது பணத்தை கட்ட இயலாததால் கடன் வாங்கவில்லை என்று பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் தான் அந்த கடனை அடைக்கவேண்டிய பொறுப்பு என்று சொன்னால் சரியல்ல.

//திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால்
தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு
செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு
அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக
கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண்.2, திண்டிவனம்